1972 மார்ச் 21]

திரு. இ. இராமசாமி : சோலையாறு அணையில் பயணிகளுக்காகப் படகுகள்விட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வால்பாறையில் இருந்து இந்த அணை கட்டப்பட்டுவிட்டதால் 22 மைல்கள் சுற்றி ஜனங்கள் வரவேண்டியதாக இருக்கிறது. அவர்களுடைய நலனை உத்தேசித்தும் உடனடியாகப் படகுப்போக்குவரத்தை ஆரம்பிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அணையைப் பார்க்க வெளியூரில் இருந்து ஜனங்கள் வந்துகொண்டிருப்பதால் அதில் படகுவிட அரசுக்கு உத்தேசமுண்டா என்பது கேள்வி. நான் ஆம் என்றேன். ஜனங்களுடைய போக்குவரத்துக்குப் படகு விடுவதாகக் குறிப்பு இல்லை. அவர் கருத்தை ஏற்றுக்கொள்ளாததற்கு வருந்துகிறேன்.

வால்பாறையில் சுற்றுலா மையம்.

* 614 வினு—திரு. இ. இராமசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

வால்பாறையை டூரிஸ்டு சென்டராக ஆக்குவது சம்பந்தமாக அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. இ. இராமசாமி : வால்பாறை மலைப்பகுதி—அங்குள்ள இயற்கைக் காட்சியைக் காண பல ஊர்களில் இருந்து ஜனங்கள் வந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை சுற்றுலாப் பகுதியாக கருதி விடுதி அமைக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறார்கள். இனிமேலாவது அதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனியாக சுற்றுலா வாரியம் என்று ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் எங்கெங்கு இயற்கைக் காட்சிகள் இருக்கின்றன, எந்த இடத்தில் சுற்றுலா விடுதி ஏற்படுத்தலாம் என்பது பற்றி அவர்கள் பரிசீலித்து வருகிறார்கள். அந்த ஆராய்ச்சியில் வால்பாறை வந்தால் அதுவும் பரீசீலிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மலைவாச ஸ்தலங்களில் உதகமண்டலம், கோடைக்கானல் இரண்டும்தான் டூரிஸ்ட் சென்டராக

ஆக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலா வாரியம் சேர்வராயன் மலை, ஆனை மலை ஆகியவற்றையும் ஆராய்ந்து சேர்வராயன் மலை அல்லது வால் பாறையில் சுற்றுலா விடுதி கட்ட முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏற்கனவே சேர்வராயன் மலையில் ஏற்காட்டில் டூரிஸ்ட் சென்டர் கட்டப்பட்டு முடிவு அடையும் தருவாயில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஓரிடத்தை டூரிஸ்ட் சென்டராக ஆக்குவதற்கு அமைச்சர் அவர்களிடத்தில் விண்ணப்பம் போட வேண்டுமா? அல்லது சுற்றுலா வாரியத்திற்கு விண்ணப்பம் போட வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரைச் சுற்றி உலா வர வேண்டும்? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : யாருக்கும் மனுப்போடத் தேவையில்லை. சுற்றுலா வாரியத்தினர்களே அங்கங்கே சென்று பார்த்து எங்கே ஏற்படுத்த வசதி, வாய்ப்பு இருக்கிறதோ அங்கே ஏற்படுத்துவார்கள்.

திரு. எம். தேவராசன் : உதகமண்டலத்தில் உள்ள ஏரியைச் செப்பனிட்டு வருகிறார்களே, அந்த வேலை இந்தச் சீசனுக்குள் முடிவுறுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : உதகமண்டலத்தில் உள்ள ஏரி தூர்வாரப்பட்டு வருகிறது. அந்த வேலை முடிய இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே கோடைகால சீசனுக்குள் முடிவடையும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

சிறுவாணியில் சுற்றுலா விடுதி

* 615 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவாணியில் சுற்றுலா விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?